Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 31 வியாழக்கிழமை (16.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 261

# ஐ.நா. உயர் அதிகாரி ஜோன் ஹோம்ஸ் புலிகளிடம் லஞ்சம் பெற்ற பயங்கரவாதி!

## அவர் இங்கு மீண்டும் வந்தால் மக்கள் ஒரு கை பார்ப்பர் என்கிறார் ஜெயராஜ்



கொழும்பு, ஓகஸ்ட் 16

ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் ஒரு பயங்கரவாதி என்றும், புலிகளிடம் லஞ்சம் - கப்பம் - பெற்றுக்கொண்டே அவர் இலங்கை தொடர்பான பொய்யான கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார் என்றும் மூத்த அமைச்சர் ஜெயராஜ் பேர்னாண்டோ புள்ளே கூறியிருக்கிறார்.



அவர் மீண்டும் இலங்கைக்கு வந்தால் அவரை அனுமதிப்பதா அல்லது ஒரு கை பார்ப்பதா என்பதை இலங்கை மக்களே தீர்மானிப்பர் என்றும் அவர் கூறினார்.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெறும் மனிதாபிமானப் பணிகளைப் பார்வையிடும் நோக்கில் ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் இலங்கை வந்தார்.

மனிதாபிமானப் பணிகளை இலங்கையில் மிகச் சிறப்பாகச் செய்துவரும் இலங்கை அரசு, அப்பணியை மேலும் பலப்படுத்தும் நோக்கில் - ஐ. நாவின் மனிதாபிமானப் பணிகளுக்கான பிரிவுடன் நெருங்கிய உறவை வளர்க்கும் திட்டத்தில் - ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸை இலங்கைக்கு வரவழைத்தது.

அவர் இங்கு வந்து நாட்டின் பல இடங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் - மங்கள கூட்டு நாளை அ'புரத்தில் கூட்டம்

கொழும்பு, ஓக.16

ஐக்கிய தேசியக் கட்சியும் மங்கள சமரவீரவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் அணியும் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்திவரும் அரசிற்கு எதிரான போராட்டங்களில் ஒன்றாக நாளை அநுராதபுரத்தில் மாபெரும் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இத் தொடரில் கொழும்பு, மாத்தறை ஆகிய இடங்களை அடுத்து நடைபெறும் மூன்றாவது கூட்டம் இதுவாகும்.

'மக்கள் அலை' என்ற தலைப்பிலான இந்தப் பொதுக்கூட்டம் அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நாளை பிற்பகல் இரண்டு மணிக்கு இடம்பெறும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கும் இக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அக்கட்சியின் முக்கிய பிரமுகர்களும், மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (சி)

உள்ளே 05 ஆம் பக்கத்தில்

*ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் II*

### ஹோம்ஸின் குற்றச்சாட்டு; அரசின் மறுப்பு

## ஐ.நா.சபை செயலரின் தொடர்பாளர் விளக்கம்

கொழும்பு, ஓக.16

"கடந்த வருடம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் கொலை செய்யப்பட்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. இதற்கு மூதூர்ப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவந்தான் பெரிதும் காரணம். இந்தச் சம்பவம் தொடர்பான முறையான விசாரணைகள் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டும்"

- என்று வலியுறுத்தியிருக்கின்றார் ஐ.நா.செயலர் பான்கீமூனின் செய்தித் தொடர்பாளர் பரான் ஹக்.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா.வின் மனிதாபிமானப் புணிகளுக்கான உதவிச் செயலர் ஜோன் ஹோம்ஸ், 'இலங்கை மனிதாபிமானப் பணியாளர்கள் பணியாற்ற முடியாத நாடு' என்று குற்றஞ்சாட்டி கருத்து வெளியிட்டிருந்தார். அவரது அந்தக் கருத்தை இலங்கை அரசுத்தரப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த நிலையில் மேற்படி விடயம் தொடர்பாக பி.பி.ஸி.யின் சிங்கள சேவையான சந்தேசியவிடம் கருத்து வெளியிட்டிருக்கின்றார் ஐ.நா. செயலரின் செய்தித் தொடர்பாளர்.

பல நல்ல சமிக்ஞைகள் தென்பட்டன அவரால் தான் விரும்பிய உயர் மட்ட அரச அதிகாரிகளைச் சந்திக்க முடிந்தது. குறிப்பாக இலங்கை ஜனாதிபதியுடனும் அவர் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றார். மேலும் இன்றைய உண்மை நிலையைப் பொறுத்தவரையில் 2006ஆம் ஆண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஞானக்கோன் இலங்கைக்கு வந்தால் கைதாவார்!

### 'இன்ரபோல்' ஊடாக அவரை மடக்கவும் ஏற்பாடு எனத் தகவல்

கொழும்பு, ஓக.16

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட பிரபல தமிழ் வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோன் இலங்கைக்கு வந்தால் அவரைக் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே அரசு கைதுசெய்யும் என்றும், அவரைக் கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸான 'இன்ரபோலின்' உதவியை அரசு நாடவுள்ளது என்றும், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்றுத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

சாள்ஸ் ஞானக்கோனை கைதுசெய்வதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் அத்தனையையும் ஒழுங்குபடுத்தி, சர்வதேச பொலிஸான இன்ரபோலிடம் ஒப்படைத்து, இன்ரபோலின் ஊடாக அவரைக் கைதுசெய்ய அரசு தீர்மானித்துள்ளது.

அவர் மீதான குற்றச்சாட்டுகளை அரசு இப்போது ஒழுங்குபடுத்திக்கொண்டு வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஞானக்கோன் இலங்கைக்கு வந்தால் அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தே நாம் கைதுசெய்வோம்.

ஞானக்கோனும் அவரது குடும்பத்தினரும் பலதரப்பட்ட குற்றச் செயல்களில் ஈடு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி வரைவு அடுத்த வாரத்தில் வருமாம்!

### இன்னும் நம்புகின்றார் அதன் தலைவர் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஓக.16

இனப்பிரச்சினைக்கான தீர்வை சிபாரிசு செய்வதற்காக நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு நேற்றுமுன்தினம் தனது கூட்டத்தை காலவரையறை குறிப்பிடாமல் திடீரென இடைநிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் -

அடுத்த வாரம் அக்குழு கூடி தனது யோசனைத் திட்டத்தை இறுதி செய்யும் என அக்குழுவின் தலைவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

"தீர்வு யோசனை தொடர்பாக நான் முன்வைத்துள்ள வரைவு குறித்து கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது கட்சிகளுக்குள் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளது எனத் தெரிவித்திருக்கின்றன. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு மீண்டும் அடுத்த வாரம் கூடும். அப்போது ஜனாதிபதியிடம் பின்னர் கையளிக்க வேண்டிய இறுதி வரைவு வடிவத்தை நாம் எட்டுவோம் என நான் நம்புகின்றேன்" - இப்படி திஸ்ஸ விதாரண நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார். (சி)

## நெடுங்கேணியில் ஹெலி தாக்குதல் வீடுகள், வயல் நிலங்கள் சேதம்!

கிளிநொச்சி, ஓக.16

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் வான்படையினரின் ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவரின் விடுமுற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கற்குளம் மக்கள் குடியிருப்புகளிலும், கீரிசுட்டான் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் ஒலுமடுப்பிரதேச மக்கள் குடியிருப்பு மீதும் தொடரான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணிப் பிரதேச செயலக வளாகத்திலும் பீரங்கிக்குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன. நெடுங்கேணி வெடிவைத்தகல் வீதியில் நடத்தப்பட் தாக்குதலில் அப்பிரதேச பொதுமக்களின் விவசாய நிலங்களும் சேதமடைந்துள்ளன. ஒலுமடுப் பிரதேசத்தில் வீடொன்று முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது. (சி)

## சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் கனவை நனவாக்க உழைக்குக!



### ஜனாதிபதி பிரதிபா பட்டீல் அழைப்பு

புதுடில்லி, ஓக.16

செழிப்பான இந்தியா உருவாக வேண்டும் என்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளின் கனவை நனவாக்கும் வகையில் ஒவ்வொரு குடிமகனும் கடுமையாக உழைக்க வேண்டும் என ஜனாதிபதி பிரதிபா பட்டீல் தனது சுதந்திரதின உரையில் அழைப்பு விடுவித்திருக்கின்றார்.

பாரதத்தின் 60 ஆவது சுதந்திரதினம் வெகு உற்சாகமாக நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட நிலையில் தனது உத்தியோகபூர்வ புதுடில்லி இல்லத்திலிருந்து தொலைக்காட்சி ஊடாக நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தும்போதே அண்மையில் முதற்பெண் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட பிரதிபா பட்டீல் மேற்கண்டவாறு [illegible] விடுத்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**மனோகரா** யாழ்ப்பாணம்.

75 ஆவது நாளை நோக்கி வெற்றிநடை போடுகின்றது

சுப்ப ஸ்ரார் ரஜனிகாந்த், ஸ்ரேயா, விவேக் மற்றும் பலர் நடித்த



The boss

காட்சி நேரம்
காலை 10.30 மணி
பிற்பகல் 2.00 மணி

(63850)



WESTERN UNION ® வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் — பணப் பரிமாற்றம் ®

WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN|O இலக்கங்கள்) கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் பரிசில்களையும் பெற்றுக் கொள்ள

**SRI MURUGAN**

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

T.P.: 021- 222 2670, 5392
Hot Line: 0777427182
Fax: 021- 2223214
e.Mail: srimurugan @ eureka.lk

303, K.K.S.ROAD,
JAFFNA. (C/53251)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்: 23.08.2007 பிற்பகல் 2 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 31.08.2007 பிற்பகல் 2 மணிவரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 31.08.2007பி.ப. 2.30 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | ஆகக் குறைந்த இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 01. பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான காணியில் மதில் அமைத்தல் | 15,000.00 | 500.00 | M 8 |
| 02. பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்திற்கு வெளிப்புற தீந்தை பூசுதல் | 20,000.00 | 500.00 | M 8 |
| 03. பல்கலைக்கழக உள்ளக வீதிகள் நிர்மாணமும் திருத்தமும் | 20,000.00 | 500.00 | M8 (வீதி) |
| 04. பல்கலைக்கழக பின்புற மதிலை உயர்த்திக் கட்டுதல் | 10,000.00 | 500.00 | M 9 |
| | | | |

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் அவர்களிடமிருந்து இக்ராட் பதிவுப் புத்தகத்தையும் பல்கலைக் கழகக் காசாளர் கரும பீடத்தில் மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை பதிவாளர், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், த.பெ. இல. 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப் பிடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

**பதிவாளர்**
**யாழ். பல்கலைக்கழகம்**
15.08.2007 (சி.-53255)

## ஏழாலை முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.16

ஏழாலையில் அமைந்துள்ள சைவசன்மார்க்க நெறிப்பாலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு திருமதி ம. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக பண்டிதர் வை.பேரின்பநாயகமும் சிறப்பு விருந்தினராக செ.சிவநடராசா, நா.இலட்சுமி காந்தன், பூ.விஜயகாந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர். (அ)

## துர்க்கையம்மன் ஆலய கொடியேற்றம் இன்று

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திரு விழா கொடியேற்றத்துடன் இன்று ஆரம்ப மாகின்றது. முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றம் இடம்பெறும்.

தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் திரு விழா இடம்பெறவுள்ளது.

குடாநாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மாலைநேரத் திருவிழா முடிவடைந்ததும் ஆலயச் சுற்றாடலில் நின்று பொழுதுபோக்குவதைத் தவிர்த்து அடியார்களை வீட்டுக்குச் செல்லும்படி ஆலயநிர்வாகம் கேட்டுள்ளது.

இரவுநேரத்தில் ஆலய வளாகத்தில் தங்குவதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் நகைகள் அணிவதையும், ஆபரணங்கள், பணம் போன்றவற்றை கொண்டு வருவதையும் தவிர்க்கும்படியும் ஆலய நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (அ-68)

## இருவர் சரண்

யாழ்ப்பாணம்,ஓக.16

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இருவர் சரணடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதி, அல்லாரை வடக்குஆகிய இடங்களைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு சரணடைந்துள்ளனர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கானஏற்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-50-68)

## வளர்ப்பு நாய்களுக்கு சுழிபுரத்தில் தடுப்பூசி

சுழிபுரம்,ஓக.16

சுழிபுரம் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு நோய்த்தடுப்பு மருந்துஏற்றும் பணிகளை மனிப்பாய் சுகாதார அலுவலகத்தினர் செய்து வருகின்றனர்.

தடுப்புமருந்து ஏற்றுவோர் ஒவ்வொருவர் வீட்டுவாசலில் வாகனத்தில் வந்துதடுப்பூசியைப் போட்டுச் செல்கின்றனர்.

கடந்தகாலங்களில் பொதுநிலையங்களில் வைத்தே தடுப்புமருந்து ஏற்றப்பட்டது.

கிராமம்கிராமமாகத் தடுப்புமருந்து நாய்களுக்கு ஏற்றுதல் இம்மாதம்பூராகவும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-28)


**தவறவிடப்பட்டுள்ளது**

15.08.2007 புதன்கிழமை திருகோணமலையில் இருந்து கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு வந்த விவேகானந்தராஜா மதிவதனி என்பவருடைய V.M. என அடையாளம் இடப்பட்ட பயணப் பை ஒன்று தெல்லிப்பளை சோதனைச் சாவடிக்கு அண்மையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 47, மூத்த விநாயகர் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
தொ.பே.0774198383


## கப்பலில் பயணம்செய்ய வந்தவர் நகரில் கடத்தப்பட்டதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.16

கப்பலில் திருகோணமலைக்குச் செல்வதற்காக யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நின்றிருந்தவேளை, இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதாக மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த திருநாமம் மனோகரன் (வயது-21) என்ற இளைஞனே மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்த இனந் தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டார்.

தனது சகோதரியுடன் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஈ.பி. ஆர்.எல்.எவ் அலுவலகத்திற்கு முன்னால் நின்றவேளை, அவர் கடத்தப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகோதரி சத்தமிட முயன்றபோது, கடத்தல்காரர்கள் அவரை மிரட்டி இளைஞனைக் கடத்திச்சென்றதாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-68)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 . 01 . 1936 — உதிர்வு 17 . 07 . 2007



**அமரர் செல்லத்துரை பாலசிங்கம்**

திதி: திருதியை 16.08.2007

*மாதம் ஒன்று சென்றாலும் மாறாது*
*உம் நினைவு மீளாத் துயரில் எம்மை ஆழ்த்தி*
*விட்டு மறைந்தீரோ ஐயா!*


கடந்த 17.07.2007 அன்று (ஆடிப்பிறப்பு) இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் சமுகமளித்தோருக்கும் தந்தி, தொலைபேசி அனுதாப மடல், மலர் வளையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நாளை (17.08.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நூலக வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (63852) — திருமதி இரத்தினேஸ்வரி (மனைவி), பாலசிங்கம் குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 03 . 07 . 1922 — விண்ணில் 16 . 08 . 1997



**அமரர் ஜே.டி.மோசஸ்**

*"ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண் முன் கொண்டிருக்கின்றேன். அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன்"* (சங்: 15:8)

பாசத்தோடு எம்முடன் வாழ்ந்த பப்பா
அன்பெனும் தீபத்தை
எங்கள் இதயங்களில் ஏற்றி வைத்தீர்
ஆண்டவன் பாதம் சென்று பத்தாண்டுகள்
மறைந்தாலும் அகங்களில் இருந்து
இனியும் உம் நினைவுகளோ அகலாதப்பா.

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

பழைய வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. (63845)

## மரண அறிவித்தல்

### செல்லர் இராசா

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகரும் சாரதியுமாகிய செல்லர் இராசா 14.08.2007 காலமாகிவிட்டார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் சின்னத்துரை (ஆசிரியர்), காலஞ்சென்ற இரத்தினம் (வர்த்தகர்) ஆகியோரின் மூத்த சகோதரரும் தவராசா, தங்கவேல், அமிர்தலிங்கம் (சுவிஸ்) இரத்தினம், காலஞ்சென்ற அசுபதி ஆகியோரின் மைத்துனரும் புஸ்பராணி, கைலாயநாதன், நிமலராணி, சசிகலாராணி (PHM சங்கானை அரசினர் வைத்தியாசாலை), பாரதராணி, மதனராணி (பருத்தித்துறை மக்கள் வங்கி உதவி முகாமையாளர்), தெய்வீகநாதன் (சுரேஸ்- வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வநாதன் (லிகிதர், புத்தூர் பிரதேச சபை), கந்தையா (பெல்ஜியம்), விஜயகுமார் (குடிசார் படவரைஞர் JMC), சிறீதரன் (வியாபாரம்), யோகராசா (காப்புறுதி முகவர்), சுதர்சினி, சுஜிதா (B.A.) ஆகியோரின் அன்பு மாமனும் சித்திரா (தாதி பயிற்சியாளர், யாழ்.போதனாவைத்தியசாலை), கஸ்தூரி (மருந்துக் கலவையாளர் VVT வைத்தியசாலை), கெங்காதரன், அருண், சாதனா, கீர்த்தனன், காலஞ்சென்ற ரிசோத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2007) வியாழக்கிழமை முற்பகல்10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா வீதி, நெல்லியடி. (சி/53253) — *தகவல்:* சுரேஸ் *(மகன்)*

## கனக்கும் மனதுடன் கலங்குகின்றோம்

**திருமதி மகேஸ்வரன்**
**ஜெகதீஸ்வரி**
(ஜெயந்தா)

தோற்றம் 09.01.1966 — மறைவு 17.07.2007



நாளும் பொழுதும் நேரில் கண்டோம் உனை
சடுதியில் மறைந்து கலங்க வைத்தாயே எமை
சகோதரியே ஆண்டுகள் பல கடந்தாலும்
எம் நினைவை விட்டு மறையமாட்டாய் நீ!

ஐங்கரன் வீடியோ சென்ரர், வவி பெயின்ற், கைதடி. (63836)

நினைவுகளுடன்: **வவி குடும்பம்.**


**தவறிவிட்டது**

வேம்பொடுகேணி பளையைச் சேர்ந்த சண்முகம் சிவாநந்தினி என்பவருடைய தே.அடையாள அட்டை (807705326V), விசேட அடையாள அட்டை, வேலை அனுமதி அட்டை என்பன கைப்பேஸ் உடன் கீரிமலைக்கும் மல்லாகத்திற்கும் இடையில் (12.08.2007) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைத்துதவவும்.



**விற்பனைக்கு**

*Sri Lanka Telecom*
தொலைபேசி விற்பனைக்கு உண்டு
தொடர்புகொள்ள
0777 110726


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆதரவில் 425 காலங்கடந்த பதிவுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஓக.16

சண்டிலிப்பாய், கரவெட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறை, சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின்போது 425 விண்ணப்பதாரரின் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகவும் நடமாடும் சேவை நடத்தப்பட்டு காலங்கடந்த இறப்பு, பிறப்பு மற்றும் திருமணப் பதிவுகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாயில் 77 விண்ணப்பதாரிகளதும் வடமராட்சியில் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் 136 விண்ணப்பதாரிகளதும் சாவகச்சேரியில் 87 விண்ணப்பதாரிகளதும் சங்கானையில் 115 விண்ணப்பதாரிகளதும் பிரச்சினைகளே உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டன.

**தென்மராட்சியில்**

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலர் சு. ஸ்ரீனிவாசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இதில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சம்பந்தர் சிவராஜலிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். யாழ். மாவட்ட உதவிப் பதிவாளர் திருமதி ப. இராஜரெட்ணம் இதில் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைச் செய்தார்.

**வடமராட்சியில்**

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களின் ஒழுங்குபடுத்தலில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இச்சேவை நடத்தப்பட்டது.

அதில் உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி ம. இராசரத்தினம், கரவெட்டி பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உதவி மாவட்ட பதிவாளர்கள், பதிவாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சேவையில் ஈடுபட்டனர்.

**வலி. மேற்கில்**

சங்கானைப் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இச்சேவை நடத்தப்பட்டது. இதில் வலி. மேற்கைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

**வலி. வடக்கில்**

இதேவேளை - வலி. வடக்கில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதல் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் கேட்டுள்ளார்.

இதுவரையில் மேற்படி இடங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின்போது பயன்பெறத் தவறியவர்களை தமது பிரிவு உதவி மாவட்டப் பதிவாளருடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-68-29)



*பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட அங்கவீனர் தினமான கடந்த 24ஆம் திகதி யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினர் தெரிவு செய்யப்பட்ட 103 வலுவிழந்தோர்களுக்கு சிற்றுண்டியும் அன்பளிப்புகளும் வழங்கினர். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் நிலைய நிர்வாகிகளையும் படத்தில் காணலாம்.*

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.16

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா எதிர்வரும் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 1.45 மணிவரை கலை இலக்கியக் கருத்தரங்குகளும் மாலை 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை இசை, நடன, நாடக கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

வலி. தென்மேற்கு, ஓக.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் பிரிவிலுள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான பற்சுகாதாரம் மற்றும் போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு எதிர்வரும் 24ஆம் திகதி வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.

சங்கானை அரசினர் வைத்தியசாலை பல் வைத்திய அதிகாரி டாக்டர் என். டேவிற், யாழ். சுகாதார திணைக்கள கல்வி உத்தியோகத்தர் எஸ். பிரணவன், மானிப்பாய் பாடசாலை பற் சிகிச்சையாளர் ஆகியோர் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர்.

* * *

வலி. தென்மேற்கு, ஓக.16

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனைக்கும் அதன் உப அலுவலங்களுக்குமிடையில் எதிர்வரும் 21ஆம் திகதி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் கயிறு இழுத்தல் போட்டி, தாய்ச்சிப் போட்டி, கிரிக்கெட் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203- 135)

### தேசிய கல்வி நிறுவக நேர்முகத் தேர்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.16

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி பரீட்சையில் தெரிவானோருக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 20ஆம் திகதி யாழ். கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளது என்று வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் அறிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை யாழ். வலயத்தில் பார்வையிட முடியும்.

இதேவேளை - தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பயிற்சிக்குரிய நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளன.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக் கழகத்தில் பதிவு செய்தவர்கள் சமூகமளிக்கத் தேவையில்லை என்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

# மணற்காட்டு இடைத்தங்கல் முகாமிலுள்ளோர் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் வாழ்கின்றனர்

**மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் சுட்டிக்காட்டு**

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மணற்காட்டுப் பிரதேசத்திலுள்ள இடைத்தங்கல் முகாமில் வாழும் 210 குடும்பங்கள் தற்போது பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றன என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த 210 குடும்பங்களைச் சேர்ந்த 759 பேர் வடமராட்சி கிழக்கு, மணற்காட்டிலுள்ள இடைத்தங்கல் முகாமில் கடந்த 3 வருடங்களாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்களை மீளக்குடியேற்றவென ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களும் முழுமை பெறாத நிலையில் உள்ளன. வீட்டுத்திட்டங்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அப்பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 3 வருடங்களாக இவர்கள் தற்காலிகக் கொட்டகைகளிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவையும் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இவற்றையும் மேலும் தாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் சுட்டிக்காட்டி பாதிக்கப்பட்ட மக்கள் பங்குத் தந்தையின் தலைமையில் மகஜர் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

அத்துடன் புனித அந்தோனியார் கிராம அபிவிருத்திச் சங்கமும் இம் மக்களின் அவல நிலைமைகள் குறித்து ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளது.

இதையடுத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் முகாமிற்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தனர்.

முகாமில் வாழ்பவர்கள் கடற்றொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். 2 மணித்தியாலம் முதல் 3 மணித்தியாலயம் வரையே தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் இக்குடும்பங்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

சுகாதார நடவடிக்கைகளும் இங்கு சீரற்றுள்ளன. [illegible] என. சுகாதார ஊழியர்கள் இங்கு [illegible] களுக்கு ஒரு தடவையே [illegible] மலசலகூடங்களில் கழிவுகள் நிரம்பியுள்ள போதும் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவற்றால் தொற்று நோய் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது எனவும் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபருக்குச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (202-68)

# சம்பா அரிசியும் சீனியும் பங்கீட்டுக்கு; பிரதேச செயலர்களின் கண்காணிப்பில்

யாழ்ப்பாணம்,ஓக.16

குடாநாட்டில் உள்ள மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்வதற்கென அரிசி, சீனி ஆகிய இரண்டு உணவுப் பொருள்களும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அறிவித்துள்ளது. இவை அந்தந்தப்பகுதி பிரதேச செயலர்களின் கண்காணிப்பில் விநியோகிக்கப்படும்.

மக்களுக்கு விநியோகம் செய்யவென 500 மெற்றிக்தொன் சம்பா அரிசியும் 300 மெற்றிக்தொன் சீனியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அவற்றைப்பெற்று சம்பா அரிசியை கிலோ 54 ரூபாவுக்கும், சீனியை 63 ரூபாவுக்கும் விற்பனைசெய்யுமாறு ப.நோ.கூ. சங்கங்களை செயலகம் கேட்டுள்ளது.

இந்தப்பொருள்களுக்கான வழங்கல் கட்டளைகளை புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்று உடன் களஞ்சியங்களில் இருந்து பொருள்களை எடுத்துச்சென்று மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்யுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் பிரதேச செயலர்கள் தமது பகுதியில் உள்ள ப.நோ.கூ.சங்கங்களின் பொருள்களின் கையிருப்பைப்பெற்று, மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் அவற்றைவழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1)

# இலங்கை உட்பட 19 நாடுகளின் இராணுவத் தளபதிகள் சந்திப்பு

இலங்கை, அமெரிக்கா உட்பட பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த பத்தொன்பது நாடுகளின் இராணுவத் தளபதிகளின் சந்திப்பு ஒன்று மிக இரகசியமான முறையில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்தவாரம் இடம்பெற்றிருப்பதாக செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத் தளபதியுடன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, மலேசியா, புரூணை, கம்போடியா, கனடா, சிலி, இந்தியா, ஜப்பான், தென்கொரியா, மொங்கோலியா, நேபாளம், நியூஸிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், டொங்கா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளின் இராணுவத் தளபதிகளும் கலந்துகொண்டனர் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் தலைவர்களின் மாநாடு சிட்னியில் இடம்பெறவிருக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு பகிரங்கப்படுத்தப்படாமல் இடம்பெற்றிருக்கின்றமை முக்கியத்துவம் வாய்ந்தது என சிட்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

''சிட்னியில் பல விடயங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை வெளியிட்டு பெரிதும் பிகு பண்ண நாம் விரும்பவில்லை'' - என்றார் ஆஸ்திரேலிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பீற்றர் லேகி.

''பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள், இராணுவத் தரப்புகள் எதிர்கொள்ளும் சவால்கள், சமாதான முன்னெடுப்புகள், பாதுகாப்பு, அனர்த்த நிவாரணம் போன்றவை உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து தளபதிகள் சந்திப்பில் ஆராயப்பட்டது.'' - என்றும் லேகி கூறினார் என சிட்னிச் செய்திகள் தெரிவித்தன.

# சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்திக்கு இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி. தென்மேற்கு, ஓக.16

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முள்ளானை சண்டிலிப்பாய் இந்து மயான தங்குமிட புனரமைப்பிற்கென ஒரு லட்சம் ரூபாவும் - சுரேஷ் பிரேமச்சந்திரன் பெரியவிளான் சென். அன்ரனிஸ் சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

ந. சிறிகாந்தா சில்லாலை தெற்கு சாந்தை விநாயகர் முன்பள்ளியின் தளபாடக் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும் கே. சிவநேசன் மாதகல் சகாயபுரம் கிராம அபிவிருத்திச்சங்க முன்பள்ளியின் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக் கென 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். (202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலை பதின்மூன்று



**அமரர் தம்பிஐயா இரவிச்சந்திரன்**

அன்னை மடியில் 05.01.1968 | இறைவன் பாதம் 10.08.1994

திதி: 16.08.2007

இருபத்தாறு வயதுவரை
இனிய கதைபேசி
இன்பத்தில் ஆழ்த்திய
எம் இனிய இராசாவே!
பதின்மூன்றாண்டுகள்
ஆனாலும் ஆறாது எம் துயர்
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'நரேந்திர வீதி',
இணுவில் மேற்கு,
இணுவில். (63846)

குடும்பத்தினர்.

---

**G.A.Q. பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

- பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.

விரிவுரைகள் ஆரம்பம்:
25-08-2007 காலை 8 மணி

குறிப்பு: B.A. Part I (யாழ்.பல்கலைக்கழகம்) விரிவுரைகள் ஆரம்பம் 25.08.2007 காலை 8 மணி.

நிர்வாகி
S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி,
ஆர் பகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (63817)

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 04 - 02 - 1938



இறப்பு 28 - 07 - 2006

**தம்பிப்பிள்ளை காங்கேசு**
(பலாலி தெற்கு. வசாவிளான்)

திதி: 16.08.2007

உங்களைப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனதோ
எங்கள் அன்புத் தெய்வத்தின்
திருமுகம் என்றும் மாறாது

உங்கள் ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கும்:

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் சந்தி, கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (63320)

---

## விழிநீருடன் நினைவுகூரும் 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 ★ 01 ★ 1966



மறைவு 17 ★ 07 ★ 2007

**திருமதி ஜெகதீஸ்வரி மகேஸ்வரன்**
(ஜெயந்தா)

ஈரவிழிகள் காயவில்லை
இதயம் எமக்கு கனக்குதம்மா - உந்தனுக்கு
நேர்ந்த வினைகண்டு இங்கு
நெஞ்சம் துடிக்கிறது - நீவிர்
வாழ்ந்த காலம் குறைவு எனினும்எம்
உள்ளத்தில் வாழும் காலம்வரை நீ இருப்பாய்
நாளும் பொழுதும் வேண்டுகிறோம் - உன்
ஆத்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

இ. கந்தசாமி
வா. அருந்தவபாலன்
செ. யோகராத்தினம்
ச. ஜெயக்குமார்
க. தயாபரன்

நண்பர்கள்
குடும்பத்தினர்.

கைதடி. (63834)

---

RUSSIA, BELARUS நாடுகளில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட UNIVERSITY களில் MEDICINE ENGINEERING DEGREE களுக்கு 2007 SEPTEMBER BATCHES இற்கு ON THE SPOT ADMISSIONS உடன் 20 நாள்களில் VISA வழங்கப்பட்டு அழைத்துச் செல்லப்படும்.
தொடர்புகளுக்கு: 0775487201,
07737067091,
0037529 9435588,
0037529 8682103
(C/53252)
United skillabroadstudies@yahoo.com.

## வரணிப் பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஒக.16

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வரணிப்பிரதேச மக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரணி மகா வித்தியாலயத்தில் பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

கண், இரத்த அமுக்கம், நீரிழிவு, தொழு, வாய்ப்புற்று, பெண்நோயியல், பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

கண் பரிசோதனையில் பார்வைக் குறைபாடு உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## சாவகச்சேரி நகர சபையில் உள்ளூராட்சி வார நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக.16

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி விழா எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9 மணிக்குச் சபை வளாகத்தில் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவுவில் முதன்மைவிருந்தினராக யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார். நிகழ்வில் உள்ளூராட்சி வார மலர் வெளியீடும், உள்ளூராட்சி வாரத்தை யொட்டி பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள், வர்த்தகர்கள், சன சமூகநிலையப்பிரதிநிதிகள், நகரசபை உத்தியோகத்தர்கள் ஆகியோரிடையே நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்குப் பரிசில்கள்வழங்கலும் இடம் பெறும். (203-207)

---

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

அவனியில் 25 - 06 - 1971



அவனடியில் 16 - 08 - 1990

**அமரர் பரராஜசிங்கம் சுதன்**

அகிலத்தை விட்டோடி
ஆண்டுகள் 17 ஆனபோதும்
ஆறவில்லை எம் இதயங்களின் வேதனை
எமக்கு மட்டும் சொந்தம்
உனது நினைவுகள் தரும் துயரம்
என்றும் உனது நினைவுடனே வாழ்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உன்னை மறவோம்.

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

உனது ஆத்மா சாந்திபடைய இறைவனை வேண்டிநிற்கும்:
அக்கம்மா, தம்பிமார், உறவினர்கள். (63802)

---

## 49 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 28 - 10 - 1968



காலன் மடியில் 29 - 06 - 2007

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சுப்பிரமணியம் அம்பிகைபாகன்**
(மடத்தடி எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்)

பொறிக்கப்பட்ட கல்லில் - என்றும்
அழியாத உங்கள் நினைவுகள்
நினைவுகளை தாங்கி நிற்கும் உறவுகள் - உங்கள்
நினைவால் தவியாய் தவிக்கின்றன
கோபம் கொள்வது யார் மீது?
உங்கள் மீதா? கொடிய காலன் மீதா?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வ அகம்,
ஆனைக்கோட்டை. (63828)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி ஜெகதீஸ்வரி மகேஸ்வரன் (ஜெயந்தா)**

அன்னை மடியில் : 09.01.1966 ஆண்டவன் அடியில் : 17.07.2007

**அன்னையே எங்கள் ஆருயிரே
உறவுகள் ஆயிரம் இருந்தாலும்
தாயே உன்போல் வருமா?
இனி என்று காண்போம் உன் திருமுகத்தை?**

எமது அன்புத் தெய்வம் காலமான செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (16.08.2007) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

கைதடி வடக்கு, கைதடி. (65835)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை
## வினாத்தாள் II

ஆக்கம்: திரு.வே.அன்பழகன்,
யாழ்ப்பாணம்.

நேரம்: 1.15 நிமிடங்கள்

01] பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாக தென்னை விசேட இடத்தை வகிக்கின்றது. எமது எந்த உணவு வேளையிலும் தேங்காய் இல்லாமல் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் அரிதாகும். மிகப் புராதன காலத்திலிருந்தே தேங்காயைப் பயன்படுத்தி உணவுகளைத் தயாரிப்பதில் பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். இதனால் இலங்கை மக்களாகிய நாம் தென்னையைப் பயிரிட்டு வருமானம் பெறுவதில் அதிகளவு அக்கறை செலுத்துகின்றோம். குறுகிய காலத்தில் உயர்ந்த அறுவடையைப் பெறுவதற்காக நவீன தொழில்நுட்ப முறையைத் தற்போது பாவிக்கின் றார்கள். இலங்கையில் தென்னை உற்பத்தி செய்யப்படும் முக்கோணப் பிரதேசத்தில் போதிய வருமானம் பெறுவதற்கும் தென்னைப் பிரதேசத்தைச் செழிப்படையச் செய்வதற்கும் சிறிய மந்தைக் கூட்டத்தைப் பராமரிக்கின்றனர். கிராமங்களில் உள்ள வீடுகளில் அவர்களுக்கு அவசியமான வயல் வேலைகளுக்கும், விவசாயத்திற்கான பசளை வழங்கவும், வீட்டுக்கு அவசியமான பாலை வழங்கவும் மந்தைகளை வளர்க்கின்றார்கள். பச்சைக் கம்பளம் விரித்தது போலக் காணப்படும் அழகான மலை நாட்டுப் பகுதிகளிலும் இயற்கையான எழிலைத் தருவனவாக மந்தைக் கூட்டங்கள் விளங்குகின்றன. ஆழமில்லாத நீர்நிலைகளும் அடர்த்தியான புற்தரைகளும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் காணப்படுவதால் அங்கும் மந்தைகள் பெருமளவு காணப்படுகின்றன. இம்மந்தைக் கூட்டங்கள் பால், தயிர், நெய் ஆகியவற்றை உற்பத்தி செய்ய உதவுகின்றன. மந்தைப் பட்டி வளர்த்தல் விவசாயிகளுக்கு மேலதிக வருமான வழியாகும். நாம் வாகனங்களில் செல்லும் பொழுது அடர்த்தியான புல்நிலங்களையும் மந்தைக் கூட்டங்கள் அங்கு மிங்கும் செல்வதையும் காணலாம்..

01.மேலுள்ள பந்தியில் இரண்டு விடயங்கள் பற்றி பிரதானமாக கூறப்படுகின்றது. அந்த இரண்டு விடயங்களும் எவை?

02.*புராதன* என்பதனைக் குறிக்கும் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

03.*அடர்த்தியான* என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

04.பந்தியிலுள்ள இணைமொழியை எழுதுக.

05.பந்தியிலுள்ள உவமைத் தொடரை எழுதுக.

06.*அதிகளவு அக்கறை* என்பதன் கருத்தை எழுதுக.

07.கிராமங்கள் வயல்வேலை தவிர்ந்த வேறு எவற்றுக்கு மந்தைகளை வளர்க்கின்றார்கள்?

08.சிறிய மந்தைக் கூட்டத்தைப் பராமரிக்கின்றனர். இதிலுள்ள அடைமொழிச் சொல் யாது?

09.உயர்திணைப் பன்மை நிகழ்கால வினைமுற்று எது?

10.பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டம் ஒன்றின் பெயரை எழுதுக.

11.*வளர்க்கின்றார்கள்* என்பதன் எதிர்கால வடிவம் யாது?

12.*பிரதேசங்களில* என்பதன் ஒருமைச் சொல்லை மாற்றி எழுதுக.

02] ஒழுங்குபடுத்தி எழுதுக.
1. மற்றைய / விட / அதிகமான / பெற்றவை / குரங்குகள் / பிராணிகளை / வளர்ச்சி / மூளை
2. பூந்தோட்டத்தில் / முல்லை / பூத்த / மணம் / கலந்து / மலர்களின் / காற்றோடு / பரவியது

03] எழுத்துப்பிழையற்ற சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
1) 1. தொலைக்காச்சி நிகழ்ச்சி 2. தொலைக்காட்சி நிகழ்சி
3. தொலைக்காட்சி நிகழ்ச்சி 4. தொலைக்காட்சி நிகள்ச்சி
2) 1. இலைப்பாறினான் 2. இழைப்பாறினான்
3. இளைப்பாரினான் 4. இளைப்பாறினான்

04] பின்வரும் தொடர்களின் உட்கருத்தினை எழுதுக.
01.நெஞ்சத்தைத் தொட்டுவிட்டது
02. செம்மறிகள்

05] பின்வரும் பேச்சுமொழி வழக்கை எழுத்து மொழியில் எழுதுக.
01. ஆத்தங்கரையில் தண்ணி குடிச்சேன்.
02. மழை பெய்யுது

06] பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
01.வைத்தியரிடம் செல்லாது தாமே செய்யும் வைத்தியம்
02.இருபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடும் விழா

07] பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.
1) Clap your hands
2) Shall we stop now?
3) Months

08] பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.
1) நூலகம்
2) துவிச்சக்கரவண்டி
3) மஞ்சள்

09] பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்களக் கருத்தின் கீழ்க் கீறிடுக.
01. நானும் நல்ல சுகம்
1) அ(ம்)பி கொ(ந்)தின் இன்னவா 2) சப சனீப்ப கொஹொமத
3) மமத் ஹொ(ந்)தின் இன்னவா
02. எனக்குப் பால் தாருங்கள்
1) ம(ட்)ட தே(னா)தென்ன 2) ம(ட்)ட கிரி (னா)தென்ன
3) ம(ட்)ட பல(த்)துறு (னா)தென்ன
03. புத்தகம் என்பதன் சிங்களச் சொல்
1) මේසය 2) පොත 3) [illegible]

10] கீழுள்ள பறவைகளின் தலைகளை இனங்கண்டு அது எந்தப் பறவையினுடையது என்பதைத் தரப்பட்ட விடையிலிருந்து எழுதுக.
(நாகணவாய், காகம், கொக்கு, தீக்கோழி, மீன்கொத்தி, மரங்கொத்தி, பருந்து, ஆந்தை)

1) 
2) 
3) 
4) 

11] கீழே தரப்பட்டுள்ள படங்களுக்குரிய பெயர்களைத் தெரிந்து எழுதுக.





(மஞ்சள், பிரண்டை, அரசு, வெங்காயம், புளி, அகத்தி, தொட்டாச்சுருங்கி)

12] சரியான விடையின் கீழ்க் கீறிடுக

01.பண்ணை மிருகங்கள் எதற்காக வளர்க்கப்படுகின்றன?
1) காட்சிக்காக 2) மகிழ்ச்சிக்காக
3) உணவுக்காக 4) தோல் பெறுவதற்காக

02.பல்லி ஆபத்திலிருக்கும் போது அது எதனை செய்கிறது?
1) நிறத்தை மாற்றுகிறது 2) துர்நாற்றத்தை வெளிவிடும்
3) வாலை கழட்டுகிறது 4) தலையை கழற்றுகிறது

03.துள்ளிப் பாய்வேன். இலைகளை உண்பேன். தோட்டம் எனது வீடு நான் யார்?




0 4.  இந்த முலையூட்டி மற்ற முலையூட்டிகளில் இருந்து வேறுபடுவது எதில்?
1) பற்கள் இல்லை 2) பறக்க முடியும்
2) கடலில் வாழ்கிறது 3) வெளிப்புற காது இல்லை

05. மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லும் பிராணி
1) ஆமை 2) நத்தை 3) எறும்பு 4) பாம்பு


06.அணி நடையின் போது "இலகுவாய் நில்" என்ற கட்டளை யின் போது முதலில் தூக்கி வைக்கவேண்டிய கால் எது?
1) வலது கால் 2) இடது கால்
3) இரண்டு கால்களும் 4) இரண்டில் ஒன்று

07.கீழே தரப்படுகின்ற எந்த செயற்பாட்டின் போது சாய்தளம் பயன்படுகிறது?




08.தேசிய அடையாள அட்டையை வழங்கும் திணைக்களம் யாது?
1) அஞ்சல் திணைக்களம் 2) கல்வித் திணைக்களம்
3) ஆட்பதிவுத் திணைக்களழ் 4) புள்ளிவிபரத் திணைக்களம்

09. பின்வரும் தாவரங்களுள் எது ஆடாதோடைஎன்னும்தாவரமாகும்?




10. இலங்கையின் மிக நீளமான ஆறு எந்த இடத்தில் கடலில் கலக்கின்றது?
1) கொழும்பு 2) கண்டி
3) திருகோணமலை 4) அம்பாந்தோட்டை

13] பின்வரும் விளையாட்டுக்களின் பெயர்களை எழுதி ஒரு குழுவில் எத்தனை பேர் பங்குபற்றுவர் என்பதை அதன் கீழ் எழுதுக.




14] கீழ்வரும் பிரசினங்களைக் கவனமாக வாசித்து அதற்குரிய சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

01.பாத்தியொன்றில் 12 மிளகாய்க் கன்றுகள் நடப்பட்டுள்ளன. அவ்வாறான 14 பாத்திகளில் நடப்பட்டுள்ள மிளகாய்க் கன்றுகளின் எண்ணிக்கை யாது?

..............................

02.1 லீற்றர் 250 மில்லிலீற்றர் குளிர்பானம் 5 பிள்ளைகளுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்களில் இருவர் பெறும் குளிர்பானத்தின் மொத்த அளவு யாது?

..............................மில்லிலீற்றர்

03.நர்த்தனா கடையிலே 1kg 500g மாவும், 450g சீனியும், 2kg கிழங்கும், 300g தேயிலையும் இவற்றோடு மிளகாயும் வாங்கினாள். அவள் வாங்கிய பொருட்களின் மொத்த நிறை 5kg ஆகும். அவள் வாங்கிய மிளகாயின் நிறை எவ்வளவு?

.............................. கிராம்

04.பெரிய பெட்டியினுள் 80 மாபிள்களும், சிறிய பெட்டியினுள் 50 மாபிள்களும் உள்ளன. இரு பெட்டியிலும் இருக்கும் மாபிள்களின் எண்ணிக்கை சமமாகும் வண்ணம் பெரிய பெட்டியில் இருந்து எத்தனை மாபிள்களை சிறிய பெட்டியினுள் போட வேண்டும்?

..............................

05.நவீனன் ஒரு பக்க நீளம் 50cm உடைய சதுர வடிவத் துணியை 50cm நீளமும் 25cm அகலமும் கொண்ட இரு துண்டுகளாக வெட்டினான். ஒரு துண்டின் வ்டிவத்திற்குக் கொடுக்கக் கூடிய பெயர் யாது?

..............................

15] கரும்பூர் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயிற்சிப் புத்தகங்கள் விநியோகிப்பதற்கான விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாக்கருமங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அமைக்கப்பட்ட தகவல் அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| தரம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4 | 148 |
| 2 | 4 | 146 |
| 3 | 4 | 147 |
| 4 | 4 | 140 |
| 5 | 4 | 138 |

01. பாடசாலையின் 1ஆந் தரத்திலும் 2 ஆந் தரத்திலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
( ____________ )

02. 1ஆந் தரத்திலுள்ள எல்லா வகுப்புக்களிலும் மாணவர்களின் எண்ணிக்கை சமமாக இருப்பின் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
( ____________ )

03. எல்லா வகுப்புகளிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் சமமாக இருக்கக்கூடிய வேறொரு தரத்தின் பெயர் குறிப்பிடுக.
( ____________ )

04. விழாவில் மாணவர் ஒருவருக்கு 6 புத்தகங்கள் வீதம் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தால் 3 ஆந் தர மாணவர்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
( ____________ )

05. தரம் 5 இல் 5A வகுப்பில் 32 பேரும், 5B இல் 34 பேரும், 5C இல் 36 பேரும், 5D இல் 30 பேரும் வருகை தந்திருந்தால் அன்று விழாவுக்கு வராதவர்கள் எத்தனை பேர்?
( ____________ )

16] "அன்று ஒரு வெள்ளிக்கிழமை. நான் பாடசாலையில் இருந்து சற்று நேரத்துடன் வீட்டுக்கு வந்தேன். எனக்குத் தலை வலித்தது. நான் தலையைப் பிடித்துக் கொண்டு அம்மா எனக்கு சுகமில்லை எனக் கூறிக் கொண்டு கட்டிலில் விழுந்தேன். அம்மா உடனே கட்டிலின் அருகில் வந்தார்......" என்னும் சம்பவத்தினைத் தொடர்ந்து சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

01..............................

02..............................

03..............................

04..............................

05..............................

06..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் பெரியதம்பி செல்லையா

*(ஓய்வு பெற்ற கிராம அலுவலர், கைதடி)*

எமது பாடசாலையின் சக ஆசிரியை திருமதி கமலினி இராஜேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை பெரியதம்பி செல்லையா அவர்களின் திடீர் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அவாது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பாடசாலைச்சமூகம்,
யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.,கைதடி.

(63841)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 03 - 04 - 1935



*மறைவு* 02 - 08 - 2003

### அமரர் இளையதம்பி பாலசிங்கம்

(மண்டைதீவு)

**திதி: 16.08.2007**

*வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவரே*
*நீங்கள் எங்களைப் பிரிந்து நான்கு ஆண்டுகள்*
*சென்று விட்டாலும்.......*
*உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை*
*விட்டு நீங்காது!*

*197, பொற்பதி வீதி,*
*கொக்குவில்.* (63312) **குடும்பத்தினர்.**

## தவறிவிட்டன

இலக்கம் NPTH-0770 கொண்ட மோட்டார் சைக்கிளின் ஆவணங்களான காப்புறுதிப்பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், பாதுகாப்புப் படையினரின் பதிவு அட்டை, பெற்றோல் அனுமதி அட்டை என்பன 14.08.2007 செல்வாய்க்கிழமை கோண்டாவில் உப்புமடச் சந்திக்கும் நெல்லியப்பளைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சி.கோரிகரன், நெட்டிலிப்பாய், கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (63832)

## கசிப்பு விற்பனை செய்த அறுவருக்கு அபராதம்

வலி.வடக்கு, ஓக.16

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 6 பேருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்று மொத்தமாக 45 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துள்ளது.

மல்லாகம் பிரதேச மதுவரித் திணைக்கள அலுவலர்கள் மல்லாகம் மற்றும் ஏழாலைப் பகுதிகளில் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் போதே இந்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்ட இவர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் மூவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் ஏனைய இருவருக்கும் முறையே 7 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (202-86)

## சண்டிலிப்பாய் பிரிவு மஸ்தியஸ்தர் தின விழா

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்)

பிரிவு மத்தியஸ்தர் தினவிழா கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

சபையின் தவிசாளர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் கலந்து கொண்டார். (202-135)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 10 - 1943



மறைவு 21 - 07 - 2004

குலபதி

### ஆறுமுகம் கந்தையா (ஜே.பி)

**(கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும், அஷ்டலஷ்மி ஸ்தாபகரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், மரண விசாரணை அதிகாரியும், நொத்தாரிசும்)**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*41, கண்டி வீதி, கைதடி.*
320, செட்டியார் தெரு,
கொழும்பு - 11. (63098)

*குடும்பத்தினர் சார்பாக:*
செல்லத்துரை முரளிதரன்
*(மருமகன்).*

## ஈரவிழிகளுடன் ஓராண்டு...

**ஜனனம்** 15 - 07 - 1928



**அஸ்தமனம்** 28 - 07 - 2006

### திருமதி கந்தப்பிள்ளை நீலாட்சிப்பிள்ளை

*திதி: ஆடிமாத பூர்வபக்க சதுர்த்தி*

*"வையகத்தில் பிறப்புள்ளதேல் இறப்புமுண்டு"*
*எனினும் இறந்தும் இறவாது எம் மனதுள் வாழும்*
*எம் அன்பு அம்மாவே!*
*அம்மா என்று ஆசையுடன் அழைத்து மகிழ*
*எமக்கு உறவு ஒன்றில்லையே*
*கண்கண்ட தெய்வமே எம் அம்மாவே!*
*வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து...*
*எங்களையும் சிறப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டி...*
*உறவுகளுக்கெல்லாம் உதிரத் துணையாய் இருக்க*
*வாழ்ந்து காட்டி எல்லோரையும் தவிக்கவிட்டுச்*
*சென்று ஆண்டு ஒன்று ஆகிவிட்டதம்மா...*
*அம்மா உங்கள் ஆத்மா சாந்தி அடைக!*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
குடும்பத்தினர்.


*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (63327)


# East West College
## Bangalore

ISO 9001 - 2000 Certified

AFFILIATED TO BANGALORE UNIVERSITY, VTU, RGUHS

- Ultra modern & beautifully land scaped campus in 20 acres land
- Spacious classrooms and fully equipped computer lab with internet facilities.
- Separate hostels for boys and girls with indoor outdoor gams, multi gym, etc.
- More than 75 companies visited last year for campus recruitment.



**East West Admission Center:**

**Colombo Office**
#23, 42nd Lane, Colombo - 06
Tel: 011-564 0787, 077-379 5707.

**Jaffna Branch Office**
51, Amman Road, Nallur, Jaffna.
021-222 2364 077-308 7795

**COURSES OFFERED AT EAST WEST**

*Medical:*
BDS – Dental Science

*Engineering:*
Bachelor of Engineering,
Electronics & Communication,
Mechanical Engineering,
Computer Science, Information Technology.

*Para Medical:*
Bachelor of Pharmacy
B. Sc – Nursing
Diploma in Madical Lab Technician
Diploma in Pharmacy

*Professional Degrees:*
Bachelor of Computer Applications - BCA
Bachelor of Business Management - BBM

*General Degrees:*
Bachelor of Sciences
Microbiology / Genetics / Bio-Chemistry / Bio-Technology



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHRAHA
*புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.*

- ராஜீவ், *நவாலி வீதி, ஆனைக்கோட்டை.*
- P.ரவி, *தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.*
- தாரகை, *முதலாம்கட்டை, பருத்தித்துறை.*
- மதுரா, *ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
- திருமகள் *களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.*

(63806)


## மரண அறிவித்தல்

### சுப்பையா தருமலிங்கம்
### (Retired Auditor, Health Department)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்போது 137, ABBEY WOOD, LONDON இல் வசித்து வந்தவருமாகிய சுப்பையா தருமலிங்கம் 15.08.2007 அன்று LONDON இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா-சிதம்பரம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற ஆறுமுகம்- சிவயோகம் தம்பதியரின் மருமகனும் சொர்ணகாந்தியின் (U.K) அன்புக் கணவரும் மகிந்தன்(Immigration Administrative Officer, U.K), சுதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாஞ்சென்ற கனகலிங்கத்தின் (Engineer, U.K.) அன்புச் சகோதரனும், கலைச்செல்வி (Doctor, U.K), செயிலா (Finance Branch, University Of Jaffna) ஆகியோரின் அன்பு மாமனும் பரமேஸ்வரி (U.K), மீனலோஜினிதேவி (U.S.A), காலஞ்சென்ற அரசரட்ணம், தனேஸ்வரி, மகேசன், சொர்ணலிங்கம், தருமராஜா, நவரட்ணராஜா, லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் விஜிற்ரா (Doctor,U.K), மதன் (U.K), சுஜிந்தா, சுஜிரோன், சிபானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் LONDON இல் நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சொர்ணகிரி', கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
*மகன்:* 0212225190. U.K: 0044 -1322442223

தகவல்:
**சுதாசன்** *(மகன்).*

## நெஞ்சகலா நினைவஞ்சலி

| 11 ஆம் ஆண்டு | 13 ஆம் நாள் | முதலாம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை *(அப்பம்மா)* | அமரர் சங்கரன் வல்லிபுரம் | திருமதி வல்லிபுரம் சரஸ்வதி *(பாப்பா)* |
| | தாயின் மடியில் | |
| 05.08.1919 | 06.02.1949 | 15.11.1942 |
| | இறைவன் அடியில் | |
| 19.07.1996 | 05.07.2007 | 20.07.2006 |
| **திதி: 16.08.2007** | | **திதி: 07.08.2007** |

**நெஞ்சகலா உங்கள் நினைவுகள்**
**எம் வாழ்வின் வழிகாட்டிகள்...**
**அஞ்சலிக்கின்றோம் அமரர்களே!**
**உங்கள் ஆன்மா சாந்தி பெறுக.**

உங்கள் பிரிவால்
துயருறும்:
**குடும்பத்தினர்.**

*நி.மு.: கருகம்பனை,*
*கீரிமலை.*
*தற்போது: கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (P/53243)

கைதடி தெற்கு,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தானாகவே மூச்சு அடங்கிப் போன அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக நாடாளு மன்றில் அங்கம் வகிக்கும் - தென்னிலங்கைக் கட்சிகளின் பிரதிநிதிகளை ஒன்று கூட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டம் திடீரென - காலவரையறை குறிப்பிடப்படாது - ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இதோ முடிவுக்கு வந்துவிட்டது, தனது இறுதி யோசனையை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இந்தா சமர்ப்பிக்கப்போகின்றது என்றெல்லாம் உறுதியாக நம்பப்பட்ட வேளையிலேயே, அது திடீரென மூச்சை நிறுத்தியிருக்கின்றது.

இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை இந்தப் பணிக்காக ஸ்தாபித்தவரே ஜனாதிபதிதான். அவரே இந்தக் குழுவின் இறுதிக்கட்ட கலந்தாய்வை இடை நிறுத்தும்படி தெரிவிக்கிறார் என அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதிநிதியும், அவரது அரசில் முக்கிய பங்காற்றும் மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதியும் குழுவின் கூட்டத்தில் வலியுறுத்திக் குறிப்பிட்டதால் வேறு மார்க்கமின்றியே, கூட்டம் நேற்றுமுன்தினம் மாலையுடன் 'அடங்கிப்' போனது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு மாவட்ட மட்ட அளவுக்கே அதிகாரப்பகிர்வு, ஒற்றையாட்சி முறையே உறுதியாக நீடிக்கும் என்ற இறுக்கமான நிலைப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடன் கூட்டுச்சேர்ந்துள்ள பேரினவாதக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியனவும் தீர்மானமாக எடுத்திருந்தன.

ஆனால் சிறுபான்மை இனத்தவரைத் திருப்திப்படுத்தும் வகையில் மாகாண மட்ட அதிகாரப்பகிர்வு, ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற விட்டுக்கொடுப்புகளாவது இறுதி யோசனையில் அடங்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி (நு ஆ) போன்றவை வலியுறுத்தி வந்தன.

இந்தக் கட்சிகளின் இந்தத் 'தாராளம்' வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராடும் தமிழர்களின் நியாயமான எதிர்பார்ப்பை - அபிலாஷையை - நிறைவு செய்யவே மாட்டாது என்பது தெளிவாயினும், அதிக எண்ணிக்கையான கட்சிகள் இந்த மட்டத் தாராளத்திற்கேனும் வந்திருப்பதால் ஆளும் ஸ்ரீ. ல. சு. கவும் அதனுடன் சேர்ந்த பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குக் கட்சிகளும்கூட இதற்காவது இணங்கியேயாக வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கடைசி நிமிட வெட்டு மூலம் அந்த எதிர்பார்ப்பையும் சிதறடித்து விட்டது ஆளும் தரப்பு.

தாம் ஆட்சிக்கு வந்தால் தென்னிலங்கையில் பல்வேறு தரப்புகளுடனும் கலந்துரையாடல் நடத்தி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டை மூன்று மாதத்துக்குள் உருவாக்கி, அதனடிப்படையில் தமிழர் தரப்போடு தீர்வு குறித்து ஆராய்வேன் என்று மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் உறுதியளித்திருந்தார். தமது 'மஹிந்த சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதையே அவர் வலியுறுத்தியிருந்தார். அந்த வாக்குறுதிப்படி மூன்று மாதங்கள் சென்று, மேலும் ஒன்றரை வருடங்கள் கடந்து விட்டன. இன்னும் தென்னிலங்கை இணக்கப்பாட்டை உருவாக்கவேயில்லை ஜனாதிபதி மஹிந்தர்.

அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளை அரவணைத்து, அந்த மாயைச் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் அவரது விட்டுக்கொடாப் போக்குத்தான் என்பதும் கண்கூடு.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு தனது தீர்வு யோசனைத் திட்டத்தை ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் இறுதி செய்யாவிட்டால் அந்தக் கூட்டத்தின் செயற்பாடுகளில் தான் இனிப் பங்குபற்றப் போவதில்லை என ஐ. தே. கட்சி காலக்கெடு விதித்திருந்தது. இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்ற நாடகத்தைக் காட்டி, சர்வதேசத்துக்கும், நாட்டுக்கும் கண்துடைப்பு வேலை செய்துகொண்டு காலத்தை இழுத்தடிக்க ஜனாதிபதி மஹிந்தரின் நிர்வாகம் முயல்கின்றது என்ற யதார்த்தம் புரிந்ததாலேயே, அந்த இழுத்தடிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. இத்தகைய கெடுவை விதித்தது.

அக்கெடு முடிவடைவதற்குள் நேற்று முன்தினமே இறுதி யோசனை வடிவைத் தீர்மானித்து, உறுதி செய்து, அதன் மூலம் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவையும் தனது செயற்பாட்டுக்குள் இழுத்து, அரவணைத்து வைத்துக்கொள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு மும்முரமாக முயன்று பணியாற்றிக் கொண்டிருக்க, கடைசிக் கட்டத்தில் அதற்கு வேட்டு வைத்துவிட்டது ஜனாதிபதியின் உத்தரவு.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்த காலம் முதல், அது பற்றிய தீவிரத்தைச் சமாளிப்பதற்கும், சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றுவதற்கும், காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் இத்தகைய சர்வகட்சிக்கூட்டம், வட்டமேசை மாநாடு, பலதரப்பு ஆலோசனை, அனைத்துக் கட்சிப் பேச்சுகள் என்ற நாடகங்களை கனகச்சிதமாக அரங்கேற்றியே வந்திருக்கின்றன. ஒவ்வொரு அரசும் தனது ஆட்சிக் காலத்தைப் பூர்த்தி செய்து, தான் ஆண்டுவிட்டுப் போவதற்காக இத்தகைய அபத்த நாடகங்களை நடத்துவது வழமையே என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அத்தகைய கண்துடைப்பு வேலையே இப்போதும் அரங்கேறுகின்றது என்பதை இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுதானும் ஒரு தடவை நிரூபித்து இருக்கிறது. அவ்வளவே.

### அமைச்சர் டக்ளஸ் கூட்டிய மாநாட்டின் முடிவுகள்

# ப.நோ.கூ. சங்கங்கள் கடன் அடிப்படையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வசதி

## தரங்குறைந்தவற்றை நிர்ப்பந்தித்து வழங்கக்கூடாது

* பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தமக்குத் தேவையான பொருள்களை நீண்டகாலக் கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்வது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.
* குடாநாட்டுக்குத் தேவையான பொருள்களை கப்பலில் எடுத்து வருவதற்கு அமைச்சரின் வழிகாட்டலில் அரச அதிபர் தயாரிக்கும் பட்டியல் தாராளமாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.
* பொதுமக்களுக்கு தரங்குறைந்த பொருள்களையும், அவற்றை நிர்ப்பந்தத்தின் பேரிலும் வழங்கக் கூடாது.

குடாநாட்டில் பொருள்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துதல், பொருள்களைத் தாராளமாகக் கிடைக்கச் செய்தல் மற்றும் உணவுப் பொருள் விநியோகம் சம்பந்தாமாக நேற்றுச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் -

மேற்படி விடயங்கள் அமைச்சரால் எடுத்துரைக்கப்பட்டன.

மாநாடு குறித்து அமைச்சு யாழ். அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாநாட்டில் யாழ்.அரச அதிபர், மேலதிக அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர், மாவட்டத் திட்டப் பணிப்பாளர், ப.நோ.கூ. சங்கங்களின் நிர்வாகிகள், நுகர்வோர் பாதுகாப்புக் குழு, சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பல்வேறு தரப்பினரும் கலந்து கொள்கிறார்கள். எனவே தற்போதைய நிலையில் யாழ்.மக்கள் பாதிக்கப்படுகின்ற உணவுப் பிரச்சினை தொடர்பில் சுதந்திரமானதும், நியாயமானதுமான கருத்துக்களை முன்வைப்பதையே தான் விரும்புவதாகவும், மக்களுக்கு நல்லதொரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் அதன் அடிப்படையில் கருத்துக்களை முன்வைக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமானதொரு இலாபத்தை எதிர்பார்த்து பொது மக்களின் நலன்கருதி பொருள்களை விநியோகிக்க வேண்டும் என்றும் பாவனைக்கு உதவாப் பொருள்களை மக்களுக்கு விநியோகிக்க முற்படக்கூடாது என்றும் எந்தப் பொருளையுமே பொது மக்கள் கட்டாயமாக வாங்கவேண்டுமென நிர்ப்பந்திக்கக்கூடாது என்றும் அமைச்சர் தெரிவித்தார். பாவனைக்கு உதவாத பொருள்கள் சங்கக் கடைகளில் இருப்பின் அவற்றைத் திருப்பிக்கொடுத்து விடுமாறும் அவர் கூறினார்.

தற்போது குடாநாட்டுக்குப் பொருள்களைக் கொண்டுவருகின்ற எட்டுக் கப்பல்களில் மாதமிருமுறை பொருள்களைக் கொண்டுவந்தால் குடாநாட்டிற்குப் போதுமான அளவுபொருள்கள் வந்துவிடும். ஆனால் இதில் மறைமுகமான தடைகள் நிகழ்ந்து வருவதாகவும், எட்டுக்கப்பல்களில் ஐந்து கப்பல்களில் தனியார்களே பொருள்களைக் கொண்டு வருகின்றனர். குடாநாட்டுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையுமே தனது வழிகாட்டலில் அரச அதிபரால் தயாரிக்கப்படுகின்ற பட்டியலின் மூலமாக தாராளமாகக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுத்துவரப்படுமென்றும் அமைச்சர் விளக்கினார்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் மூன்று மாதத்திற்குரிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லை எனத் தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இன்றுடன் அனைத்து மாதங்களுக்குமான நிவாரணங்கள் உடனடியாகச் சென்றடைய வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்றைய மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பலரும் தங்களது பிரச்சினைகள் தொடர்பிலும், உணவுப் பொருள்களின் சீரான விநியோகம் மற்றும் அவற்றின் தட்டுப்பாட்டை நீக்குதல்குறித்தும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

# பல்கலை மாணவர்கள் தொடர் போராட்டம்

கொழும்பு, ஓக.16

பல்கலைக்கழகங்களை தனியார் மயமாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்து, அதனைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் நாட்டிலுள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்ளுக்கு முன்பாக நேற்றிலிருந்து ஒரு வாரம்வரை தொடர் ஆர்ப்பாட்ட மற்றும் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் முன்பாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் துமிந்த நாகமுவ கூறுகையில் -

அரசு பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் தனியார் மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இது நீண்டகால முயற்சி.


ஆனால் வெளிப்படையில் பல்கலைக்கழகங்களைத் தாங்கள் தனியார் மயமாக்கப் போவதில்லை என்று அரசுத் தலைவர்கள் கூறிவருகின்றனர். அவ்வாறு கூறிக்கொண்டு திரைமறைவில் தனியார் மயமாக்கலுக்கான முயற்சிகள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன.

பல்கலைக் கழகங்களில் குறைபாடுகளை நீக்கக் கோரியும் பல்கலைக்கழகத் தனியார் மயமாக்கல் திட்டத்தைக் கைவிடக் கோரியும் இந்தப் புதன்கிழமை முதல் ஒரு வாரத்திற்கு இலங்கையில் உள்ள அதிகமான பல்கலைக்கழகங்களுக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளோம். - என்றார். (சி)

## நான் என்பது எது?

சுவாமி என்கால் முறிந்துவிட்டது என்கிறான் (ஒரு மாணவன்) அவ்வாறெனில் நீ யார்? உன்கால் எது? அப்போது நீ வேறு, உன்கால் வேறு என்றாகிறது. ஒரு முறை தேகமே நீ என்கிறாய். அடுத்த விநாடி எனது தேகம் என்று வேறுபடுத்திப் பேசுகிறாய்.

அப்போது எதெல்லாம் உன்னிலிருந்து விலகியிருக்கிறதோ அது திருஸ்யம் என்கிற காட்சி. ஆகவே எந்த ஒரு காட்சியிலும் அடிப்படையாக விளங்கும் நீயே சத்தியம். இந்த சத்யம் மாறுபடாதது; நிலையானது. கடந்த நிகழ், எதிர்காலம் அனைத்திலும் மாறாதது இந்த நான் என்கிற தத்துவம்.



வேதங்கள் இதனை 'நான்' என்றே அழைக்கின்றன. நான் என் பது ஆத்மாவைக் குறிக்கிறது. ஆத்மா தான் ஹ்ருதயம் என மாறுகிறது. இந்த இதயமே கருணையின் மையம்.

கடவுளுக்கே முதல் பெயர் நான் என்பதே. உபநிஷ தங்களில் அஹம் பிரம் மாஸ்மி என்ற பதத்திற்கு என்ன பொருள் அஹம் - நான், பிரம்மாஸ்மி - பிரம்மம்,

பிரம்மம் என்ற வார்த்தையும் கூட நான் என்ற பதத்திற்குப் பின்னர்தான் வருகிறது. எல்லாவற்றிற்கும் மூலாதாரமானது நான். ஆனால் இந்த தத்துவத்தின உண்மையை புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை.

**சாயி சிந்தனை**

## சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்

மீனம் மீனம்

சங்காமையூர் சண்முகரத்தினம்

**மீனம்:** (பூரட்டாதி 4ஆம்கால் மற்றும் உத்தரட்டாதி, ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு)

இதுவரைகாலமும் 5ஆம்இடமான கடகராசியில் இருந்து 2வருடம் ஒருமாதம் 11 நாள் வரை சமபலனைத்தந்த சனிபகவான் உங்கள்ராசிக்கு 6ஆம் வீடான சிங்கராசிக்கு 05.08.2007 இல் வந்து பகையான கேதுவுடன்இருக்க அடுத்து 2 1/2 வருடங்கள் தரக்கூடிய பலன்களா வன.

சத்துரு, வருத்தம், ஆளுமைத்தன்மை, எதிரிகளை வெல்லும் அதிகாரவல்லமை, மாமன்வழி உறவுநிலை சண்டை, சரீர வருத்தம், சர்ப்பகண்டம், நியாயத்தையுடைய அதிகாரிகளினால் விதிக்கப்படும் சிறைவாசம்.

இப்படியான பலன்களைத்தரக்கூடிய 6ஆம் பாவத்தின் பலனுக்குரிய சிங்கராசியின் சனி, கேது இருவருமேபலமயாக இருக்க அதனைச் செவ்வாய் 28.07.2007 இல் இருந்து பார்ப்பதால் இந்தராசிக்குரியவர்களுக்கு மேற்சொன்ன பலனில் ஒன்றை16.9.2007 வரை தரக்கூடிய தாக்கமான பலன்தரும் காலமாகும்.

மேலும் வியாழசுகம் இருந்தாலும் வியாழனால் சனி, கேதுவை நோக்கும் காலம் 15.11.2007 இன் மேல்தான் பலன்தர இடமுண்டு. எனவேகுறித்த ராசிக்குரியவர்கள் மிக அவதானமாக காலத்தை ஓட்டவேண்டிய நிலைக்குரியவர்களாவர்.

முக்கியமாக சனியைவிடக் கேதுவிலகும் காலம் 10.4.2008 வரை பெரிதாகச் சுகம் தரும்காலமல்ல.

**குடும்பஸ்தருக்கு:-** குடும்பரீதியாக கடன், பணத்தால் ஏற்படும்பிணக்குகள், குடும்பச் சச்சரவு என்பன தந்தாலும் புத்திரருக்குநற்பலனும் புத்திரரால் சுகமடையக்கூடிய நற்பலனும் பெறுவர். 10.4.2008இன்மேல் எதிலிலும் வெற்றிகிடைக்கக்கூடிய நற்பலனை அடைவர்.

**மாணவர்களுக்கு:-** கல்வியால் நற்பலன்உண்டு, சிலர் வெளிநாடுசென்றுகல்வி கற்கவும் பலன் உண்டு. காலில்காயப் படக்கூடிய நிகழ்வுகள் ஏற்படாது தவிர்த்துக்கொள்வது முக்கியம்.

**தொழிலாளர், உத்தியோகத்தர்களுக்கு:-** குரு பாக்கிய ஸ்தானத்தில் இருப்பதால் தொழில் சிறப்புண்டு. உத்தியோக உயர்வுகளும் உண்டு. வருட இறுதியில் இடமாற்றம் பெறுவீர்கள் பணம் கொடுக்கல் வாங்கல்களினாலும் வேண்டப்படாத பிரச்சினைகளில் மாட்டிக்கொள்ளக்கூடிய பலனும் உண்டு.

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 32 | வெள்ளிக்கிழமை 17.08.2007 |
| திதி : சதுர்த்தி | மு.ப. 09.00 |
| நட்சத்திரம் : | அத்தம் முன்னிரவு 08.30 |
| சுபநேரம் | : 06.05 - 07.35 |
| ராகுகாலம் | : 10.35 - 12.05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களின் விலைகள் அதிகரிக்காதிருக்க உரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஓக.16

நாட்டின் ஏனையபகுதிகளை விட குடா நாட்டில் வாழ்க்கைச்செலவு மிகவும் அதிக மாகியுள்ளது. பலர்தொழில்களை இழந்தும், தொழில்வாய்ப்பு இன்றியும் அன்றாட வாழ்க் கையை நடத்தமிகவும் கஸ்டப்படுகின் றார்கள்.

கப்பலில் கொண்டுவரப்படும் பொருள் களின் விலைகள் மிக அதிகமாக உள்ளன. அதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவரத்தினவிடம் வலியுறுத்தப் பட்டது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக் குமான மக்கள்குழுவின் பிரதிநிதிகள், அத் தியாவசிய சேவைகள் ஆணையாளரை நேற்றுப்பிற்பகல் சந்தித்தபோது மேற்படி நிலைமைகள் அவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இத்தூதுக் குழுவில் எஸ். பரமநாதன், வே.தவரத்தினம், எஸ்.ராஜா ராம், கே.அருமைநாயகம், எஸ்.பூரணச்சந் திரன் ஆகியோர்அங்கம் வகித்தனர்.

* மழைகாலம் நெருங்குவதால் மூன்று மாதங்களுக்குத்தேவையான அத்தியா வசிய உணவு மற்றும் பாவனைப் பொருள் களைஇப்போதேகளஞ்சியப்படுத்த வேண்டும்.

* சிறுபோக நெல்விளைச்சல் இல்லாத நாட்டின் ஒரேஒருமாவட்டம் யாழ்ப்பாணம் ஆகையால் எதிர்வரும் பெரும்போகத்தில் பத்தாயிரம் கெக்ரெயர் நிலப்பரப்பில் நெற் செய்கைக்குத்தேவையான விதைநெல் மற்றும் உள்ளீடுகள், கிருமிநாசினி ஆகிய வற்றை உரியகாலத்தில் கொண்டுவந்து நியாயவிலை களில்வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-வெங்காயம், வாழைப்பழம், முந்திரிகை போன்ற உள்ளூர்உற்பத்திகளை தெற்குக்கு எடுத்துச்செல்வதற்கு உரியகாலத்தில் கப்பல்வசதிகள் செய்யப்படவேண்டும்.

*விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், கட்டுமானப்பணிகள் குடாநாட்டில்பாதிப் படைந்துள்ளன. அவற்றை மீளத்தொடங்கு வதற்குத்தேவையான பெர்ருள்களை கப் பல் களில்நியாயமான கட்டணத்துடன் கொண்டுவர வசதிசெய்யவேண்டும்.

மேற்படி விடையங்களைத் தூதுக்குழு வினர் அத்தியாவசிய சேவைகள்நாயகத் திடம் வலியுறுத்தினர்.

ஆரம்பத்தில் பொருள்களைக் குடா நாட்டிற்கு எடுத்துவருவதில் தாமதங்களும் கஷ்டங்களும் இருந்தன ஆனால் நிலைமை இப்போது சீர்திருந்தியுள்ளது. பொருள் களின் விலைகள் அதிகரிக்காதிருக் கத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந் தும் மேற்கொள்ளப் படும் - என்று ஆணை யாளர் எஸ்.பி.திவரத்தின தூதுக் குழுவின ரிடம் உறுதியளித்தார். (அ)

## சுதந்திரப் போராட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

ஜனநாயகத்தைப் பரவலாக்கி திட்டமிடும் நடைமுறையில் கீழ் மட்டத்தில் உள்ளவர் களும் முடிவெடுக்கும் உரிமை பெற வழி வகுக்க வேண்டும். இதன் மூலமே துடிப்பான இந்தியா உருவாக முடியும். இவ்வாறு ஜனநாயகத்தைப் பரவலாக்கும்போது தூய்மை யான நிர்வாகத்தையும் உறுதி செய்யவேண்டும்.

உலகலாவிய பயங்கரவாதம், வறுமை, அறியாமை, நோய்கள் ஆகியவற்றை எதிர்த்து முழு வேத்துடன் போராட வேண்டிய நிலையில் இந்தியா உள்ளது. அனைத்து நாடுக ளுடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டு, உலக அமைதிக்காகவும், பாது காப்பிற்காக வும் உழைக்க வேண்டும். நம் நாட்டின் பிரகாசமான இலக்கை அடைவதற்கு நாமே காரணம் என்பதை உணர்ந்து, 'எழுமின்,விழுமின், இலக்கை அடையும் வரை ஓயாது உழைப்போம்.' - என்ற சுவாமி விவேகானந்தரின் அறைகூவலை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும். - என்றார் ஜனாதிபதி பிரதிபா.

## ஐ.நா. சபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்கள் அதிகளவில் படுகொலை செய்யப்பட்ட நாடுகளில் இலங்கை இரண் டாம் இடத்தில் உள்ளது. இதற்கு மூதூர்ப் படுகொலையே மிக முக்கிய காரணமாகும். - என்று அவர் விளக்கம் அளித்தார்.

தன்னார்வத் தொண்டுப் பணியாளர் களின் பாதுகாப்பு அவர்கள் பணிபுரியும் இடங்களில் உறுதிப்படுத்தப்படவேண் டும் என்று ஜனாதிபதியிடமும் ஜோன் ஹோம்ஸ் கேட்டுக்கொண்டார். தன்னார் வத் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் பாதுகாப்புக் குறித்து எங்களுக்கு கவலை யுள்ளது. இது தொடர்பாக -அவர்கள் இலங் கையில் தொண்டாற்றுவது குறித்து- அனைத்துத் தரப்பினருடன் பேசுவோம்- என்றும் சொன்னார் பரான்.

(சி)

## ஞானக்கோன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். ஞானக்கோனின் சகோதரர் ஜயந்த ஞானக்கோன் புலிகளுடன் மிக நெருங்கிய ஒட்டுறவைக் கொண்டவர்.

அவரது தாயார் போதைப்பொருள் கடத் தலில் கைதாகிப் பின்னர் வெளிநாடு சென்றவர். அவர்கள் வெள்ளவத்தையைச் சேர்ந்தவர்கள். ஞானக்கோனின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் எதிர்க்கட் சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மிக நெருங்கிய உறவைக் கெண்டுள்ள னர். - என்றார்.

(சி)


## கணினி வேலைகள் தெரிந்தவர்கள் தேவை

தகைமைகள் :

1) வேகமான Computer Typing (தமிழ், ஆங்கிலம்)
2) M.S.Office,PageMaker

18,20/08/2007 ஆகிய திகதிகளில் எமது நிறுவனத்திற்கு நேரில் வரவும். நேரம் : காலை 9.00 - 12.00வரை

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

ANDRA DIGITAL IMAGE
உப்புமடம் சந்தி, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்.

T.P-: 021 4590268

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

907 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம்

10 15 47 50

14-08-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4227481 - 4243130

ஜக்பொட் பரிசு ரூபா.1,754,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 345,371 | 10/- | 3,453,710/- |
| 2 இலக்கங்கள் | 31,782 | 20/- | 635,640/- |
| 1 இல. + லக்கினம் | 31,409 | 30/- | 942,270/- |
| 2 இல. + லக்கினம் | 2,841 | 100/- | 284,100/- |
| 3 இலக்கங்கள் | 846 | 500/- | 423,000/- |
| 3 இல. + லக்கினம் | 75 | 5,000/- | 375,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,754,700/- | - |
| மொத்தம் | | | 6,513,720/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 412,333 | | 7,537,220/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,525,950/-

தொடர் இல. 5115870 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4242641-0-76 |
| குருநாகல் | 4233356-8-18 |
| திருகோணமலை | 4231673-8-90 |
| மாத்தறை | 4229174-8-72 |
| பதுளை | 4234321-2-93 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செல் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## ஐ.நா. உயர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் சென்று மனிதாபிமானப் பணி களைப் பார்வையிட்டார். அதற்கான அத் தனை வசதிகளையும் நாம் அவருக்குச் செய்து கொடுத்திருந்தோம்.

மனிதாபிமானப் பணிகள் இலங்கையில் மிகவும் சிறப்பாக இடம்பெறுகின்றன என்று எம்மிடம் கூறிய அவர், ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு இலங்கை பற்றி மிக மோச மான - இலங்கையின் நற்பெயரைக் கெடுக் கும் விதத்தில் - கருத்துக்களை வெளியிட் டுள்ளார்.

இலங்கை மனிதாபிமானப் பணியாளர் களுக்குப் பாதுகாப்பற்ற நாடாகவுள்ளது என்று அவர் அப்பட்டமான பொய்யைக் கூறியுள்ளார். அவர் இவ்வாறு கூறுவார் என்று நாம் எதிர்பார்க்கவேயில்லை.

**பயங்கர வாதத்தை ஆதரிப்பது**

மொத்தத்தில் அவர் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் ஒருவர் என்பதை நிரூபித்துள் ளார். பயங்கரவாதிகளை ஆதரிப்போரை நாம் பயங்கரவாதிகளாகவே கருதுவோம். அந்த வகையில் பயங்கரவாதிகளுக்கு உதவும் ஹோம்ஸும் ஒரு முழுப் பயங்கரவாதியே. அவர் புலிகளிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டுதான் இப்படி இலங்கை குறித்து மோசமான கருத்துகளை வெளியிட்டிருப் பார் என நான் நினைக்கிறேன் இல்லா விட்டால் அவர் இவ்வாறு கூறவேண்டிய தேவை இல்லை.

கருணா குழுவினரின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று அவர் கூறியிருக்கின்றார். புலிகளின் ஆயுதங்கள் அவரது கண்களுக்குத் தெரியவில்லையா? புலிகள் வன்முறையில் ஈடுபடுவதும் அப் பாவி மக்களைக் கொன்றுகுவிப்பதும் அவ ருக்குத் தெரியாதா?

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர் களைப் புலிகள் தங்கள் இயக்கத்தில் பல வந்தமாகச் சேர்த்துள்ளனர். அதுபற்றி ஏன் அவர் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை?

கிழக்கில் நாம் விரைவில் தேர்தலை நடத்தவுள்ளோம். அந்தச் சந்தர்ப்பத்தில் கருணா குழு மாத்திரமன்றி ஆயுதக்குழுக் கள் அனைத்தும் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்று நாம் சொல்லி வருகிறோம். ஆனால் ஹோம்ஸ் புலிக ளைத் தவிர்த்து கருணா அணியினர் மாத் திரமே ஆயுதங்களைக் கீழே வைக்கவேண் டும் என்று கூறுகின்றார்.

நிச்சயமாக அவர் ஒரு பயங்கரவாதி தான். புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற் பவே அவர் செயற்படுகின்றார். அவர் மீண்டும் இலங்கைக்கு வருவதற்கு எந்தத் தடையுமில்லை. ஆனால் அவர் அப்படி வந்தால் மக்கள் அவரைப் பார்த்துக் கொள்வார்கள். - என்றார். (சி)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு செல்வநேசன்

கல்வளை வீதி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சிவகுரு செல்வநேசன் நேற்று (15.08.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் தவமணி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரனும் கவிதரன் (ஆசிரியர்), ஜெயச்செல்வி, கஜன் (ப.நோ.கூ. சங்கம், மானிப் பாய்), ஜெயசிறி (மானிப்பாய் மகளிர் கல்லூரி - 2009 கலைப் பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாலஉமா (P.H.M. - யாழ்.போதனா வைத்தியசாலை), மங்களரூபன் ஆகி யோரின் மாமனும் சுஜானாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2007) வியா ழக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வளை வீதி,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி மீனாட்சிப்பிள்ளை விநாசித்தம்பி

மிருசுவில் வடக்கு, மன்னன் குறிச்சியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி மீனாட்சிப்பிள்ளை விநாசித்தம்பி நேற்று (15.08.2007)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பியின் அன்பு மனை வியும் சிவஞானவதியின் அன்புத்தாயும் சிவராசாவின் (இத் தாலி) அன்புமாமியும் சிவகலா, சிவாஜினி, சிவரூபி, சிவரஞ் சினி, நிசாந்தன், துசாந்தி, நவபவீந்திரன், உதயச்செல்வன், ஆனந்தராஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இந்துஜன், விநோ ஜன், அபிநயா, அபிசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வதி விடத்தில் இன்று (16.08.2007) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங் காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
**தி.சிவராசா (மருமகன்).**

### திருமதி ஜெயலட்சுமி தயாபரன்

தெல்லிப்பழை, விராங்கொடையைப் பிறப்பிடமாகவும் சுது மலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெய லட்சுமி தயாபரன் நேற்று (15.08.2007) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தயாபரனின் (துரை) மனைவியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களான கோபிகிருஷ்ணா, ஜெயகிருஷ்ணா, ஹரிகிருஷ்ணா, இராதாகிருஷ்ணா ஆகியோரின் அன்புத்தாயும் குழந்தைவடிவேல் - அம்மாக்குட்டி தம்பதியரின் மகளும் காலஞ் சென்ற பசுபதிப்பிள்ளை - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமக ளும் அன்னலட்சுமி, தவராஜசிங்கம், காலஞ்சென்ற தனலட்சுமி, சிறீஸ்கந்தராஜா, சித்திரவடிவேல், இராஜலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரியும் தவராஜா, பத்மராஜா (மோகன் வீடியோ), மனோகரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2007) வியா ழக்கிழமை பிற்பகல்3மணியளவில் அவரதுஇல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் வீதி,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

தகவல்:
**ப.தயாபரன் (துரை-கணவர்).**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org